இதழ்-48

01.06.2022

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

# தயார்படுத்துங்கள்!




நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடிகளால் வெகுவிரைவில் வரலாறு காணாத பெரும் பஞ்சம் ஒன்றை நாம் எதிர்கொள்ள வேண்டிவருமென நிபுணர்கள் எச்சரிக்கின்றார்கள்.

தற்போது நிலுவும் எரிபொருட்களின் தட்டுப்பாட்டால் மரக்கறி பழ வகைகளை விற்பதில் பாரிய தடங்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் அவை வீண்விரயமாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான பழவகைகளையும் மரக்கறிகளையும் வற்றல்களாக்கி வெயிலில் உளர்த்தி களஞ்சியப்படுத்தி வைக்கும் செயல்முறைகளை நாம் பின்பற்ற வேண்டும். உணவுப் பஞ்சம் ஏற்படும் காலத்தில் இந்த வற்றல்கள் பேருதவியாக இருக்கும்.

வெளிநாடுகளில் கோடை காலங்களில் இவ்வாறு வற்றலாக்கப்படும் உணவுப் பொருட்களைத் தான் குளிர்காலங்களில் பயன்படுத்துவார்கள். அந்த முறையை நாமும் பின்பற்ற வேண்டும். எமது நாட்டைப்பொறுத்த வரை சூரிய ஒளியே வற்றலாக்கப் போதுமானளவு உள்ளது.

உணவில் மட்டுமல்ல உயிர் காக்கும் மருந்துப் பொருட்களிலும் இந்தப் பற்றாக்குறை ஏற்படும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இந்த இடர் நிறைந்த காலத்தில் அரச வைத்தியசாலைகளில் மருந்து கிடைப்பதை உறுதி செய்யும் முகமாக தூமி அமையத்தால் முதற்கட்டமாக இரண்டு லட்சம் ரூபாயும் அடுத்த கட்டமாக ஒரு லட்த்தி இருபதினாயிரம் ரூபாயும் மதிக்கத்தக்க மருந்துப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. சிறியளவிலேயே இந்த திட்டத்தை செயற்படுத்த ஆரம்பித்த போதும் தாமாக முன்வந்து பலர் நன்கொடைகளை வழங்கியதால் மூன்றாம் கட்ட உதவித்தொகைக்கான வேலைகளையும் ஆரம்பித்திருக்கிறோம். உதவிய அந்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

எனவே எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பதை உறுதி செய்து கொண்டு வரப்போகும் சவால்களுக்கு எம்மையும் நாம் சார்ந்த சமூகத்தையும் தயார்படுத்துவதற்கான செயற் திட்டங்களை மிக விரைவாக எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

04 காத்திருக்குமாம் கொக்கு
08 இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது - கலாநிதி. சி.க. நவரட்ணராஜா
13 மருத்துவ உதவிகள்
14 கனவு கலைந்தது
15 நானும் புதிசா இருந்தவன் தான்
19 சீன - அவுஸ்ரேலிய உறவில் மாறுவது அவுஸ்திரேலியாவா? மாறியது சீனாவா?
25 மனப்பசி
26 ஈழச்சூழலியல்
30 குறுக்கெழுத்துப்போட்டி
31 சித்திராங்கதா
38 பூப்பந்தாட்ட போட்டித் தொடர்

தவிர்க்க முடியாத காரணங்களால் சிங்ககிரித்தலைவன் தொடர்
சில மாத இடைவெளியின் பின் பிரசுரமாகும்....
மன்னிக்க வேண்டுகிறோம்.


# காத்திருக்குமாம் கொக்கு!

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட அந்த படகு மெல்ல மெல்ல கடலால் விழுங்கப்பட்டுக்கொண்டிருக்கும் அந்த காட்சி அட்டைப்படத்தில் மட்டுமா தெரிகிறது? திரும்பும் திசையெல்லாம் இப்போது கவிழும் படகுகளைத்தான் காண முடிகிறது.

கல்விதான் மூலதனம் என்று விடாப்பிடியாகப் படித்து உயர்தரப் பரீட்சைக்காக காத்திருக்கிறான் விமலன். அவனது கல்விச் செலவுகளுக்காக அவன் குடும்பம் ஒருவேளை உணவை மட்டுமல்ல சில வேளை இருவேளை உணவையும் தியாகம் செய்திருக்கிறது. ஆனால் நாட்களாகியும் பரீட்சை நடக்கவில்லை. பரீட்சைகள் அச்சடிக்க தாள் இல்லையாம். ”அவனைப் படிப்பிச்சு விட்டால் அவன் எல்லாத்தையும் பாத்துப்பான்” என்கிற நம்பிக்கைப்படகு அங்கே கவிழத் தொடங்கிவிட்டது.

அப்பாவை போர் கொன்றது. அம்மாவை கொரோனா கொன்றது. இரண்டு பருவ வயது தங்கைகளும் சியாமளனை நம்பித்தான் இருக்கிறார்கள். படிப்பு ஏறாத சியாமளன் கட்டிடக் கூலி வேலைக்கு போவது வழமை. எகிறிய விலைகளுக்கு ஈடுகொடுக்க முடியாத முதலாளி கட்டுவதை நிறுத்திக்கொண்டு இருப்பதை சேமித்தார். இருப்பே இல்லாத சியாமளன் வேலையும் இல்லாமல் திண்டாடத் தொடங்கிவிட்டான். தங்கைகள் திருமணத்திற்கு காசு தேடியவன், தங்கைகள் சாப்பாட்டிற்கே காசில்லாமல் போனான். வேலை தேடுவதையே வேலையாக்கிக் கொண்டவனின் கடமைப்படகு கவிழத் தொடங்கிவிட்டது.

முருகையாவின் உயிரை இன்னும் பிடித்துவைத்திருப்பவை அவர் தினமும் உண்ணும் மருந்துகள் தான். வேளைக்கு மூன்றென்று மூன்று வேளையும் எடுக்காவிட்டால்



அவர் மூச்சை நுரையீரல் எடுத்துக் கொடுக்க மறுத்துவிடும். வங்கி நிறைய பணம் இருக்கிறது. ஊர் நிறைய காணி இருக்கிறது. என்ன பயன் எந்த வைத்தியாசாலையிலும் அந்த மருந்து இல்லை. சில ஆயிரங்கள் பெறுமதியான மருந்து பல ஆயிரங்களை கடக்கிறது. வெளியூர்களிலிருந்து எல்லாம் அந்த மருந்தை வரவைக்கிறார். எத்தனை நாளைக்கு? இறக்குமதி இல்லை. ஓரிரு வாரத்தில் அந்த மருந்து நாட்டிலேயே இருக்காது. காசெனும் கடதாசியாலும் காப்பாற்ற முடியாத அந்தப்படகும் மூழ்கத்தொடங்கி விட்டது.

வறுமைக்கோட்டிற்கு கீழ்ப்பட்ட இந்த நாட்டில் நம் பிள்ளை பிறந்து க்'டப்படக் கூடாதென தாம்பத்தியத்தையே தவிர்த்த அந்த புதுமண தம்பதிகளின் இல்லறப்படகும் கவிழத்தொடங்கி விட்டது.

மண்ணை நம்பி உழுதுவைச்ச காலம் போய் உரத்தை நம்பி உழுது வைச்ச காலம் வந்ததால் மலடாகிப் போனது மண். உரம் இல்லையேல் மண்ணில் உயிர் இல்லை எனும் நிலை வந்தது. உரம் இறக்குமதி தடையாகிப் போனது. உழவர் வாழ்வின் விளைச்சல் கப்பலும் கவிழத் தொடங்கி விட்டது.

பக்கத்து வீட்டுக்காரனின் மரணச் செலவுகளைக் கேட்டதும் பத்து மாதங்களாக படுக்கையில் சாவை வேண்டிக் கிடந்தவன் முதன் முதலாக வாழ்வை வேண்டத்தொடங்கி விட்டான். வாழும் செலவா? சாகும் செலவா? கூட என்கிற கணக்காய்வில் மூழ்கிக் கொண்டிருக்கிறது அந்த உயிர்ப்படகு!

இத்தனை படகுகள் மூழ்கியும் அங்கே ஒரு படகு மூழ்காமல் வீறு கொண்டு செல்வதை மூழ்கும் படகுக்காரர்கள் முறைத்துப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப்படகில் ஒரு குரங்கும் இருந்தது. மற்றப்படகுகள் மூழ்குவதைக் கண்ட அந்த குரங்கு ஆனந்தக் கூத்தாடியது. அது ஆடிய கூத்தில் அந்தப் படகும் கவழ்ந்துவிடும் போல் இருந்தது. எத்தனையோ பேர் சொல்லிப் பார்த்தார்கள். கேட்கவில்லை அந்த மதி கெட்ட மந்தி. பொறுமையிழந்த ஒருவன் குரங்கைத்தூக்கி கடலில் எறிந்தான். நீச்சல் தெரியாத குரங்கு தண்ணீரில் தத்தளிக்கத் தொடங்கிவிட்டது. சில நிமிடமாக போராட்டம் தொடர்ந்தது. இன்னும் ஒரு நிமிடம் தொடர்ந்தால் குரங்கு இறந்துவிடும் என்கிற நிலையில் குரங்கைத் தள்ளியவனே துடுப்பைக் கொடுத்து குரங்கை காத்தான். எல்லோருக்கும் ஆச்சரியம். தள்ளியவனே ஏன் காப்பாற்ற வேண்டும்? ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால் அதற்குப்பிறகு அந்தக்குரங்கு அமைதியாக இருந்தது. பிறகுதான் விசயம் புரிந்தது. கடலின் சக்தியும் படகின் அருமையும் புரிந்ததால் குரங்கு அமைதியாக இருந்தது.

அந்த குரங்கின் நிலையில்த்தான் இங்கேயும் பலர் இருக்கிறார்கள். ஆனால் என்ன இவர்களை

இப்போது காப்பாற்றி துடுப்பு ஒன்றை தர யாரும் இல்லை. படகு மூழ்கப்போவது உறுதியாகி விட்ட நிலையில் மூழ்கிக்கொண்டிருக்கும் படகில் தொடர்ந்தும் இருப்பது புத்திசாலித்தனமில்லை என்கிறார்கள். தப்பிக்க வழி அறிந்தவர்களை படகை விட்டு போகுமாறு படகுக்காரர்களே அறிவுறுத்தியும் விட்டார்கள். நீச்சல் தெரிந்தவர்கள் கடலில் குதித்து விட்டார்கள். பறக்க தெரிந்த பறவைகள் கரை தெரியாத அந்தக்கடலிலே எதோ நம்பிக்கையில் பறக்கத் தொடங்கிவிட்டன.
ஆக்கள் குறைந்தால் பாரம் குறைந்து படகு அமிழாது மீள மிதக்குமென்று கணக்குப்போட்ட சிலர் அடுத்தவர்களை அனுப்புவதில் அக்கறை காட்டினார்கள். கடல் தட்டி நின்ற அந்த படகுக்கு அருகில் எங்கிருந்தோ வந்த இயந்திரப்படகு ஒன்று அறிவித்தல் விட்டது. வயதுக்கு வராதவர்களையே மீட்கப்போவதாக சொன்னது. வயதுக்கு வந்தவர்களுக்கு வாழ்க்கையின் காலாவதித் திகதி முடிந்துவிட்டதா என்ன? தத்தளிக்கும் கடலில் சொல்வதெல்லாம் சட்டம்.

அதுநாள் வரை அந்த கடலிற்குள் எங்கள் வாழ்க்கையை சாத்தியமாக்கியது அந்த படகு. அந்த படகு இல்லையென்றால் என்றோ மூழ்கி மூச்சை இழந்திருப்போம். எம்மை வாழ வைத்த படகை மீட்டெடுக்காது ஓட மாட்டோமென உறுதி மொழி எடுத்து இருந்த சிலருக்கும் இப்போது கலக்கம் ஏற்பட்டு இருக்கிறது. காற்றுள்ள போது தானே தூற்றிக்கொள் என்பது போல மூழ்க முன்பு தானே தப்பிக்க முடியும். தம் முடிவுகளை மீள்பரிசீலனை செய்ய அவர்களுக்கு காலம் போதுமானதாக இல்லை.

அதெல்லாம் இருக்கட்டும்! அதைக் கவனித்தீர்களா? மூழ்கிக் கொண்டிருக்கும் அந்த படகில் இன்னும் மூழ்காத பகுதியில் ஒரு கொக்கு நிற்கிறது. அந்தக் கொக்கிற்கு அங்கே என்ன வேலை? ஓடுமீன் ஓடி உறுமீன் வரும் வரை காத்திருக்கிறதா? அல்லது படகுகள் கவிழ்வதை தன் பாரத்தால் சமநிலைப்படுத்த மறு பக்கத்தில் நின்று விசையைக் கொடுக்கிறதா? அல்லது எதையோ வேண்டி தவம் இருக்கிறதா?

இந்தப்பிரபஞ்சத்தில் விடை இல்லாத கேள்விகள் என்று எதுவுமே இல்லை. எல்லாக் கேள்விகளுக்கும் காலம் என்றோ ஒருநாள் விடையைச் சுமந்து வரும். சில வேளை அந்த விடை சுகமாக இருக்கும். சிலவேளை அந்த விடை சுமையாக இருக்கும்.

***இந்தக் கொக்கின் புதிர் அவிழும் போது படகு முற்றாக கவிழ்ந்து இருந்தது!***


அகவை 61 இல்
ஆறு.திருமுருகன் ஐயா
அறுபது ஒரு சுற்று
அறங்கள் நிறைந்திருந்த
அந்த அனுபவங்கள் கொண்டு
அறுபத்தியொன்றில் தொடரும்
அடுத்த சுற்று
அதனிலும் அதிசிறப்பாய்
அமைந்திட துமியின்
அன்பு நிறை வேண்டுதல்கள் ஐயா
உங்கள் ஆசிகளோடும் அன்போடும் பயணிக்கும்
துமி குழுமம்



# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது 2022

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களைக் கௌரவித்து பிறந்தநாள் அறநிதியச் சபையை உருவாக்கியுள்ளது. ஆண்டுதோறும் எம் மண்ணில் இளைய தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஆற்றலாளர் இருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு சிறப்பு விருது வழங்கி கௌரவித்தல் என்ற திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். 2022ம் ஆண்டுக்கான இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது பெறுபவர்களாக பின்வரும் இருவரை அறநிதியச்சபை தெரிவு செய்துள்ளனர்.

கலாநிதி.சி.க.நவரட்ணராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொறியியல் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

திரு. இராமச்சந்திரன் இரமணன்
ஆசிரியர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## கலாநிதி.சி.க. நவரட்ணராஜா

B.Sc. (Eng), M.Sc. (Eng), PhD in Engneering.

கலாநிதி. சின்னையா கருப்பையா நவரட்ணராஜா அவர்கள் 27.09.1976 மலையக சமூகத்தின் டிக்கோயா போர்டைஸ் கொணக் கொல்லை தோட்டத்தில் பிறந்தார். தந்தை பெயர் சின்னையா கருப்பையா, தாயாரின் பெயர் சுந்தரம் சரோஜினி. இவர் தமது ஆரம்பக் கல்வியை டிக்கோயா புளியாவத்தை தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை டிக்கோயா புளியாவத்தை தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியிலும் (Haton Highlands College) பெற்றுக் கொண்டார்.



இவர் பேராதனை வீதி, கண்டியில் மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார். மனைவி திருமதி பிரஷாதினி குமாரசாமி. இவர் சென்னை கலாஷேத்ரா நுண்கலைக் கல்லூரியில் பரதநாட்டியத்தில் பட்டம் பெற்றவர். தற்போது கண்டி நகரில் பிரபல்யமான கலாசமர்ப்பணா நிருத்யாஷேத்ரா எனும் நடனக் கல்லூரியின் நிறுவுனராகவும் கண்டி கச்சேரியின் சந்தச கலாபீடத்தில் பரதநாட்டிய ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றார். இவரது மகன் சாய்அக்சத் கண்டி திருத்துவ கல்லூரியில் தரம் 04ல் கல்வி கற்கின்றார்.

1994/1995 ஆண்டு காலப் பகுதியில் உயர்தர, கணிதப் பிரிவில் அமரர் ஆசிரியர் ஜீவராஜன் அவர்களுடைய பெருமைக்குரிய முதலாவது தொகுதி மாணவராக ஹைலன்ட்ஸ் கல்லூரியிலிருந்து பேராதனை




பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கு தெரிவாகி பொறியியல் பீடத்தின் இளமானி பட்டத்தை (BSc in Engineering -Hons First class) பெற்றுக் கொண்டார்.

### பட்டப்பின் மேற்படிப்புக்களின் விபரம்

01. M.Sc in Engineering> University of Oklahoma. USA (GPA4.0/4.0)

02. PhD in Engineering> University of Wollongong. Australia (With Examiner's> Commendation for outstanding PhD Thesis)

இளமானி பட்டம் பெற்றதுடன் கட்டடப் பொறியியல் பிரிவில் சிறந்த பெறுபேற்றுடன் முதலாம் தர சித்தியைப் பெற்று புலமைப் பரிசில் மூலம் அமெரிக்காவின் ஒக்லஹோமா பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவில் முதுமானிப் பட்டத்தையும் அவுஸ்ரேலியாவின் வொலாங்கொங் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் தனது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

### கடமையாற்றிய/ கடமையாற்றுகின்ற இடங்கள்/ பல்கலைக்கழகங்கள்

2007 இல் இளமையாக இருக்கும் போதே தனிப்பட்ட பகுதி நேர கணித ஆசிரியராக கடமையாற்றிய இவர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாவதற்கு முன் அப்கொட்

பெயார்லோன் த.வி.ன் அரசாங்க நியமன ஆசிரியராக கடமையாற்றியுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் 2001 இல் இளமானிப் பட்டப்படிப்பை முடித்த பின் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற்பீடத்தில் உதவி விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார்.

அமெரிக்காவில் முதுமானிப் பட்டத்தை நிறைவு செய்த பின் கலிபோர்ணியா மாகாணத்தில் புசழரி னுநடவய ஊழளெரடவயவெள ஐஉெ எனும் ஒரு தனியார் பொறியியல் நிறுவனத்தின் திட்டப் பொறியியலாளராகவும் கலிபோர்ணியா மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில் முறை பொறியியலாளராகவும் 2006 - 2011 வரை கடமையாற்றியுள்ளார்.

2012ம் ஆண்டு தொடக்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றுகிறார்.

புவி தொழில்நுட்பப் பிரிவில் முதுமானிப் பட்டம் வழங்கும் பிரிவின்





ஒருங்கிணைப்பாளராக உள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் போன்றவற்றின் பொறியியல் பீடத்தின் புவித் தொழில்நுட்பவியல் பிரிவில் வருகைதரு விரிவுரையாளராக கடமையாற்றுகின்றார்.

க.பொ.த உயர்தர பொறியியல் தொழில்நுட்ப பாட பிரிவின் தமிழ் மொழி மூலமான பிரதம பரீட்சகராக தொழிற்படுகின்றார்.

### சேவை அடிப்படையிலான கடமைகள்

e- kalvi தொண்டு நிறுவனத்தின் மூலம் இலங்கையில் நடத்தப்படும் e- kalvi செயற்பாடுகளுக்கான மலையக ஒருங்கிணைப்பாளராக மற்றும் மலையக பல்கலைக்கழக மாணவர்களையும் பல்கலைக்கழக பட்டதாரிகளையும் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள ஸ்டெம்

(STEM Team Halton) அமைப்பினுடைய நிறுவுனராகவும் தலைவராகவும் மற்றும் ஆசிரியர் ஜீவராஜன் ஞாபகார்த்த மாணவர் அமைப்பினுடைய தற்போதைய தலைவராகவும் சேவையாற்றி வருகின்றார். இதன் மூலம் 42 பின் தங்கிய தோட்டப் பாடசாலைகளுக்கு e-kalvi நிகழ்ச்சிகளினால் கல்வியில் அனுசரணை வழங்கப்படுகிறது.

பொருளாளர், பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம். தமிழ் பொறியியலாளர்கள் ஒன்றியத்தையும் (TEF - Tamil Engineers Foundation) அவுஸ்ரேலியா பல்கலைக்கழக புலமைப்பரிசில் திட்டத்தில் ஒருங்கிணைத்து பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களுக்கான கல்வி மானிய உதவியை பெற்றுக் கொடுக்க இணைப்பாளராக தொழிற்படுகின்றார்.

### இதுவரை பெற்ற விருதுகள்

புவித் தொழில்நுட்பவியல் பிரிவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் 50ற்கு அதிகமான ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

அமெரிக்க ஆய்வு சஞ்சிகை ஒன்றில் சமர்ப்பித்து வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரை ஒன்றிற்காக 2021ம் வருடம் ஏப்பிரல் மாதம் இலங்கையின் தேசிய ஆய்வு சபையின் (NRC) விஞ்ஞான ஆய்வுகளுக்கான உயரிய விருதினைப்பெற்று தனது பல்கலைக்கழகத்திற்கும் தான்



பிரதிநிதித்துவப்படுத்தும் மலையக சமூகத்திற்கும் மிகப்பெரிய பெருமையைச் சேர்த்துள்ளார்.

2021 ற்கான பேராதனை பல்கலைக்கழக பொறியியற் பீடத்தின் ஆராய்ச்சி சிறப்பு விருது பெற்றுள்ளார்.

ரயில் போக்குவரத்து தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்காக திட்ட முன் மொழிவு ஒன்றை சமர்பித்து 2019ம் ஆண்டு உலக வங்கியின் ஆய்வுகளுக்காக 40 மில்லியன் ரூபா நிதி ஒன்றைப் பெற்று ஏறக்குறைய 12 மாணவர்களைக் கொண்டு அத்திட்டத்தை ஆய்வு செய்து வருகிறார்.

மலையக சமூகத்தில் டிக்கோயா போர்டைஸ் கொணக்கொல்லை தோட்டத்தில் சாதாரண தோட்டத் தொழிலாளிகளான சின்னையா கருப்பையா தம்பதிகளுக்கு முதற் பிள்ளையாக பிறந்து கடுமையான பொருளாதார சவால்களுக்கு மத்தியில் தனது இரு சகோதரர்களுடன் தனது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்கள் மூலம்



சிரத்தையான முயற்சிகளின் ஊடாக இவ் உயரிய பெருமைக்குரிய இடத்தை அடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றும் தனது வாழ்வின் இரண்டு மிகப் பெரிய தூ ண்களாக 2010ம் ஆண்டில் அமரரான ஆசிரியர் மு. ஜீவராஜனையும் 2013இல் அமரரான தனது தந்தையையும் குறிப்பிட்டு அவர்களை இழந்தது தனது வாழ்க்கையில் மிகப் பெரும் சோகமான நிகழ்வுகள் எனக் குறிப்பிடுகின்றார்.

வாழ்க்கையில் பொருளாதாரதார ரீதியாக எந்த நிலையிலிருந்தாலும், அர்ப்பணிப்புக்கள் மூலமும் முயற்சிகளின் மூலமும் உயரிய நிலைக்கு வர முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கலாநிதி சி.க நவரட்ணராஜா அவர்களை வாழ்த்துகிறோம்.

இவர் மென்மேலும் பல விருதுகள் பெற்று சமூகத்திற்கும் கல்விக்கும் சேவையாற்ற எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவியை வணங்கி வாழ்த்துகின்றோம்.

**நன்றி**
**செஞ்சொற்செல்வர்**
**கலாநிதி. ஆறு.திருமுருகன்**
**பிறந்தநாள் அறநிதியச்சபை,**
**துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**


**அடுத்த மாத இதழில் இவ்வருடத்துக்கான மற்றைய இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது பெற்ற யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. இ. இரமணன் அவர்களைப் பற்றி பார்ப்போம்.**

## மோதிர விரலை பறித்த சிங்கம்



ஜமைக்காவில் வனவிலங்கு பூங்கா ஒன்றில் சிங்கத்திடம் சேட்டை செய்த ஊழியர் ஒருவர் பரிதாபமாக விரலை இழந்துள்ளார். பார்வையாளர்களை கவர்வதற்காக சிங்கத்தை சீண்டிய போது ஆத்திரமடைந்த சிங்கம் அவரது வலது கையை கடித்துள்ளது. மிரண்டு போன பணியாளர் கையை பின்னால் இழுக்க முற்பட்ட போது அவரது மோதிர விரலை சிங்கம் பறித்துவிட்டது. ஆரம்பத்தில் வேடிக்கை என நினைத்த பார்வையாளர்களுக்கு இந்த சம்பவம் இறுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# மருத்துவ உதவிகள்



**1**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முதற்கட்டமாக சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான Tacrolimus மருந்துகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

**2**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இரண்டாம் கட்டமாக ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான glucometer and strips அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

**3**

மூன்றாம் கட்டமாக மேலும் glucometer and strips என்பனவற்றை கொள்வனவு செய்ய நிதியுதவி கோரி அன்புரிமையோடு துமி அழைக்கிறது.

இந்த இடர்காலத்தில் மருத்துவ உதவிகளின் யாவருக்கும் கிடைப்பதை உறுதிசெய்யும் முகமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பின்வரும் திட்டங்கள் ஊடாக நிதியுதவி பெறப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பெரும்பணிக்கு உதவிய நல்லுள்ளங்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.




ஆர்வமுள்ளவர்கள் இந்த புனித கைங்கரியத்தில் இணைந்து கொள்ளுங்கள்.



போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்
TEACHING HOSPITAL JAFFNA
SRI LANKA



போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்
TEACHING HOSPITAL JAFFNA
SRI LANKA

# கனவு கலைந்தது



என் கனவில் நேற்று
ஏரோது வந்தார்
வட்டிவீதங்கள்
கடன்பற்றியெல்லாம்
வகுப்பெடுத்தார்
மரியாளின் பக்தர்கள்
இங்கிருப்பதால்
அப்பின் தடையென்றார்
மார்க்கத்தினுள்ளும்
முரண் என்றார்
நாடுகடக்க முயல்வோரை
சிறைப்பிடிக்க உத்தரவிட்டதாய்
கதை சொன்னார்
மீள வழியேதும்
உண்டோ எனக்கேட்ட ஞாபகம்
சிரித்த ஏரோது
அடிமைகளை விற்கும் சந்தைகளை
தேடுவதாய் சொன்னார்
செம்படைகள் ஏதும் என முணுமுணுக்க
ரஷ்யகட்டுரைகளில் அவர்கள்
சமத்தர்கள் என்றார்
கனவு கலைந்தது
கனவே தான்.....

சாரங்கன்

கிஷோர்த்தனா சிவானந்தா
சீதுவை

# நானும் புதுசா இருந்தவன்தான்



அன்று சனிக்கிழமை.

நான் இந்த வீட்டுக்கு வந்த நாளிலிருந்து என்னை ஒரு தடவை கூட ஒழுங்காக ஏறெடுத்து பார்க்காத சீதா, ராதாவின் தந்தை அன்றைக்குத்தான் என்னை முதன்முதலாக பார்ப்பது போல பார்த்தார். என்னடா இது என்றிருந்தது எனக்கு.

“சீதா, இது பழசாகிட்டு என? நாளக்கி குப்ப வண்டி வரும், அதுல தூக்கி போட்டுவிடுமா.”

“சரிப்பா..”

அப்பொழுதுதான் எனக்கும் வயதாகி போய்விட்டது என்பதை உணர்ந்தேன். ஒரு மாதம் கூட இல்லையே, ஆசை ஆசையாய் என்னை அக்காவும் தங்கையும் வாங்கிக்கொண்டு வந்தார்களே! உறுதியான மரக்கைப்பிடியுடன் பளபளவென்று மின்னுகின்ற இரத்தச்சிவப்பு நிற தகட்டுத்துண்டொன்றை வளைத்து நெளித்து சில ஆணிகளை செருகி, இரண்டு கைகள் நிறைய ஈர்க்குகளை அள்ளியெடுத்து அவற்றை நெருக்கி அளவாகவும் அழகாகவும் செய்யப்பட்டிருந்தேன் நான்.

“சுத்தம் சுகம் தரும்” என்பதுதான் எனது உயிர்மூச்சு. வீட்டைச்சுற்றி தினமும் சேருகின்ற குப்பை கூழங்களை பத்து எண்ணுவதற்குள் கூட்டிப்பெருக்கி தள்ளிவிடுவேன். இப்படித்தான் ஒருநாள், நான் வீட்டிற்கு வந்து இரண்டு நாட்கள் கூட இல்லை, அக்காவும் தங்கையும் எனக்காக சண்டை போட்டுக்கொண்டார்கள்.

“ராதா, நீ எனக்கு தங்கச்சி. நான்தான் வயசுல பெரியவ, உன் அக்கா, அதனால வாருகல என்கிட்ட குடு.”

(வாருகல் என்பது விளக்குமாறுக்கு உரிய மட்டக்களப்பு பேச்சு வழக்கு சொல்)

“அக்காவா? அதெல்லாம் எனக்கு தெரியா, நான்தான் இன்னைக்கு வீடு பெருக்க போறன்.”

“ராதா, இப்ப ஒழுங்கா வாருகல என்கிட்ட குடுக்கப்போறியா இல்லயா?”

“இல்ல இல்ல இல்ல, அம்மா... இவள கொஞ்சம் பாருமா.. அம்மா..?”

சண்டை போட்டுக்கொண்டது என்னமோ எனக்காகத்தான். ஆனால் அக்கா சீதாவுக்கு அவளுடைய நண்பிகளுடன் சுற்றுலா செல்ல வேண்டும், அதற்கு ஆயிரம் ரூபாய் பணம் வேண்டும், அதற்காக வீட்டில் நாலு வேலையை செய்து, எப்படியாவது அப்பாவிடம் நல்ல பெயர் வாங்கி, சுற்றுலாப்பணத்தை பெற்றுக்கொள்வது தான் அவளுடைய எண்ணம். ஆனால் தங்கை ரொம்பவும் கெட்டிக்காரி, சின்னவள் ராதாவுக்கு அம்மா, அப்பா, அக்கா என அனைவருடனும் சேர்ந்து படம் பார்க்க தியேட்டருக்கு செல்ல வேண்டுமென்று ஒரே ஆசை. அம்மாவுக்கு ஐஸ் வைத்தால் தானே அம்மா இதைப்பற்றி அப்பாவிடம் பேசுவார்? பின்னர் எல்லோரும் ஒன்றாக தியேட்டருக்கு சென்று படம் பார்க்கலாமே. அதற்குத்தான், அக்காளும் தங்கையும் இப்படியாக என்னை ஒரு வழி பண்ணிவிட்டார்கள்.

அசுத்தமான வீட்டை நாலு முறை பெருக்குவதில் தவறொன்றுமில்லை. ஆனால் ஏற்கனவே சுத்தமாக இருக்கின்ற வீட்டை நாற்பது முறை பெருக்குவது தகுமா? நானும் வந்த முதல் நாளிலிருந்து பொறுத்து பொறுத்து என் கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டேன். என்னை ஒரு மனிதனாக மதிக்க தேவையில்லை, குறைந்தபட்சம் ஒரு உணர்வுள்ள வாருகலாக பார்க்கக்கூடாதா? போதாத குறைக்கு இவர்களுடைய ஜிம்மி வேறு. காலையும் மாலையும் என்னையே தேடி வந்து சிறுநீர் கழித்துவிட்டு போகும். இப்படி நான் தனியாக புலம்புவது இது ஒன்றும் முதல் தடவையல்ல.

அவன் அவன் பிரச்சனை அவன் அவனுக்குத்தான் தெரியும். ஆயிரம் தான் என்றாலும் காய்ச்சலுக்கு தலையிடியும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்று சும்மாவா சொன்னார்கள். வாங்கி வந்த புதிதில் என்னை பெருக்குவதற்கு மட்டும்தான் உபயோகித்துக் கொண்டார்கள். ஆனால் இன்று என்னடாவென்றால், மலசலகூட அடைப்புக்கும் நான்தான். வீட்டு வளவிற்குள் வருகின்ற சிறிய மிருகங்களை விரட்டுவதற்கும் நான்தான். இது போதாதென்று என்னை ஒரு சுவரில் சாத்தி சாத்தி வைத்து, நானும் சறுக்கி விழுந்து விழுந்து, என் உடம்பில் விழாத அடிகள் இல்லை. அடி படாத இடங்கள் இல்லை. இப்படி கஷ்டப்படுவதற்குத்தானா என்னை



என் பெற்றோர்கள் பெற்றெடுத்தார்கள். என் அம்மாவும் அப்பாவும் பிரதான வீதியில் பெருக்குகிறார்கள். என் பெரியம்மா குடும்பம் எங்கேயோ கொழும்பில் ஒரு கம்பனியில் பெருக்குவதாக கேள்விப்பட்டேன். ஆனால் என் சகோதரர்கள் என்னுடன் இங்கு அயலவர்களின் வீடுகளில்தான் இருக்கிறார்கள். என் சின்ன தங்கை இந்நேரம் என்ன செய்கிறாளோ. பாவம்.

இப்படி புலம்பி புலம்பியே ஒருவாறு இருட்டிவிட்டது. எப்படியோ நாளை காலை சீதாவும், ராதாவும் என்னை குப்பை வண்டியில் போட்டுவிடப்போகிறார்கள். நான் வாழ்ந்த இந்த வீட்டில் இறுதி இராப்பொழுதை கழிப்பது உண்மைக்கும் மனதிற்கு மகிழ்ச்சியளிக்கின்றது.

சூசூ.. சூசூ..

அடச்சீ, ஐயோ..

இந்த நேரம் இந்த ஜிம்மி வேறு. சிறுநீர் கழிப்பதற்கு ஒரு நேரம் காலம் இல்லை இவனுக்கு. இவனையும் நாளைய தினத்திற்கு பிறகு சந்திக்க மாட்டேன் என? குட்டிப்பையா சரி இன்றைக்கு மட்டும்தானே. பரவாயில்லை.

ஒருவாறு பொழுதும் புலர்ந்துவிட்டது. என்ன ஒரே சத்தமாக இருக்கிறது. சீதா, ராதாவின் தந்தையின் குரல் தான் அது.

“சீதா.. அம்மா சீதா..”

“என்னப்பா..”

“உன்னோட ஸ்கூல் ட்ரிப்புக்கு இதுல ஆயிரம் ரூபா இருக்கு.. கவனமா கொண்டுபோய் வை”

“தாங்ஸ்ப்பா”

“ராதாக்குட்டிய வர சொல்லு”

”சரிப்பா”

ராதா தந்தை அழைத்த சத்தம் கேட்டு வீட்டிற்குள் ஓடிவந்தாள், “என்னப்பா?”

“அப்பா புது வாருகல் வாங்கிட்டு வந்திருக்கன். கொண்டுபோய் வீட்டுக்கு பின்னால வைடா”

“சரிப்பா..”

ஓஹோ, இன்று புதிய விருந்தாளி வருவதால் தான் என்னை தூ க்கி வீசுகிறீர்களா? சரி சரி. நான் புதிய விருந்தாளியாக வந்த பொழுது இங்கிருந்த எனது பழைய நண்பன் சொன்ன வார்த்தைகள் இப்பொழுதுதான் என் மனத்தில் சுரீரென்று தைக்கின்றன.

“நண்பா, நீ புதிசா இருக்குமட்டும் தான் உனக்கு மதிப்பு. பழசானா உன்ன தூக்கிபோட்டுடுவாங்க. ஏன்னா இங்க அன்பு ஒன்றுதான் அனாதை. நாளைக்கு நான் கௌம்பிடுவேன். பாத்து இருந்துக்க..”

அன்று வந்த புதிதில் அந்த வார்த்தைகளை தட்டிக்கழித்து,

பெருமிதத்துடனும் கர்வத்துடனும் இருந்ததற்குத்தான் இன்று அனுபவிக்கின்றேன் போலும். பரவாயில்லை இருக்கட்டும். மனிதர்கள் சுத்தத்தை அசுத்தம் செய்கின்றவர்கள், ஆனால் நாங்கள் அசுத்தத்தை சுத்தம் செய்கின்றவர்கள். எப்பொழுதும் நாங்கள் ஒரு படி மேல்த்தான் இருக்கின்றோம். என்னதான் மனிதர்கள் இப்படியிருந்தாலும், நான் வாருகல் ஆயிற்றே. கடைசி வரைக்கும் தேய்ந்து தேய்ந்து உயிரைக்கொடுத்து வேலைசெய்வது தான் என் குணமே.

வேகமாக ஓடிவந்த ராதா புதிய விருந்தாளியை எனக்கருகில் வைத்துவிட்டு போய்விட்டாள். நான் இருக்கின்ற கோலத்தில் திரும்பிப்பார்ப்பதற்கே கொஞ்சம் கூச்சமாகத்தான் இருக்கிறது. சரி இனி என்ன செய்வது...! பார்த்துவிடுவோம்.

ஆ... திரும்பிப்பார்த்தது தான் தாமதம், அந்த அழகை வர்ணிக்க யாராலும் முடியாது. எங்களை போல அல்லாது, அவள் இன்னும் அழகாக நேர்த்தியாக இருந்தாள். அப்பொழுதுதான் அவளும் என்னை மேலிருந்து கீழ்வரை கவனிப்பதை உணர்ந்தேன். கூச்சம் ஒரு பக்கம், என்னுடைய தேய்ந்துபோன ஈர்க்குகள் மறு பக்கம். பேசுவதற்கு வார்த்தைகளே வரவில்லை.

“ஹா.. அது வந்து..”

திடீரென வானில் மிதப்பதை போன்ற ஒரு உணர்வு எனக்கு. பின்புதான் தெரிந்தது, என்னை யாரோ தூக்கிச்சென்று, குப்பை வண்டியில் போடுகிறார்கள். நான் அப்பொழுதே நினைத்தேன், இது அந்த சீதா, ராதாவின் தந்தையாகத்தான் இருக்க வேண்டும். அவரே தான். நான் வந்த நாளிலிருந்து இந்த மனிதனுக்கு என்னுடன் அப்படி என்னதான் கோபமோ?

குப்பை வண்டி புறப்படப்போகிறது, புதிய விருந்தாளி, அந்த அழகி என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். ஏதாவது சொல்லி விடவேண்டுமென்று என் தேய்ந்த ஈர்க்குகள் துடித்துக்கொண்டிருந்தன.

“நானும்ம்ம்ம்ம் புதுசாசாசா இருந்தவன்தான்ன்ன்ன்ன்”

*****



# சீனா – அவுஸ்ரேலியா உறவில் மாறுவது அவுஸ்ரேலியாவா? மாறியது சீனாவா?

ஐ.வி. மகாசேனன்

2021 - 2022 ஆம் ஆண்டுகளில் உலக நாடுகள் கொரோனா பெருந்தொற்றாலும் ரஷ்சியா - உக்ரைன் போரின் விளைவினாலும் அரசியல் பொருளாதார ரீதியாக பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள போதிலும், ஜனநாயக தேர்தல்களும் ஒருங்கே அரங்கேறிக்கொண்டு தான் உள்ளது. சில நாடுகள் ஆட்சி மாற்றத்தை வரவேற்றுள்ளதுடன், சில நாடுகள் முன்னைய ஆட்சியை ஏற்று மீளவும் வாய்ப்பளிக்கும் சூழலினையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இவ்வாறானதொரு சர்வதேச அரசியல் பின்னணியிலேயே, அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஆட்சி மாற்றமொன்று இடம்பெற்றுள்ளது. அவுஸ்ரேலியாவை வலது பக்கம் தள்ளிய “ஒரு புல்டோசர்” என்று தன்னை அழைத்த தற்போதைய பிரதம மந்திரி ஸ்காட் மோரிசன், அவரது சவாலான போட்டியாளர் தொழிற்கட்சியின் அந்தோனி அல்பானீஸ ால் தோற்கடிக்கப்பட்டுள்ளார். அவுஸ்ரேலியாவில் ஏறக்குறைய ஒரு தசாப்தகால பழமைவாத தலைமைக்குப் பிறகு மோரிசனை முற்றிலுமாக நிராகரித்து, மிதவாதம் வெற்றி பெற்றுள்ளது. இவ்வெற்றியின் பின்னர் இந்தோ-பசுபிக் அரசியல் வெளியுறவிலும் மாற்றங்களுக்கான எதிர்வுகூவலை சர்வதேச அரசியல் அவதானிகள் வெளிப்படுத்தியுள்ளார்கள். இக் கட்டுரை அல்பானீஸின் தேர்தல் வெற்றியின் பின்னர் அவுஸ்ரேலிய-சீன உறவின் தன்மையை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த மே-21அன்று நடைபெற்ற பொதுத்தேர்தலில், “புரட்சியை அல்ல, புதுப்பித்தலை” என்ற பிரச்சாரத்துடன் மக்களிடம் வாக்குக்கோரிய அந்தோனி





அல்பானீஸை அவுஸ்ரேலிய மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இது கிட்டத்தட்ட ஒரு தசாப்த பழமைவாத ஆட்சியை அந்தோனி அல்பானீஸ் மற்றும் அவுஸ்ரேலிய தொழிலாளர் கட்சி தலைமையிலான அரசாங்கத்துடன் மாற்றியது. இவ்அரசியல் மாற்றம் இந்தோ-பசுபிக் அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய போக்கே இரு பிரதான போட்டியாளர்களின் பிரச்சார நடவடிக்கைகளிலும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. குறிப்பாக கடந்த காலங்களில் இந்தோ-பசுபிக் அரசியலில் அவுஸ்ரேலியா போட்டியாளராக வரித்துக்கொண்ட சீனாவுடனான உறவில், அல்பானிஸ் மென்போக்கான நகர்வை மேற்கொள்வாரென்பதாகவே அவரது ஆரம்ப உரையாடல்கள் வெளிப்படுத்தி நிற்கிறது.

சீனா மற்றும் அவுஸ்ரேலியாவின் முட்கள் நிறைந்த இராஜதந்திர உறவு சமீபத்திய ஆண்டுகளில் வெளியுறவுக் கொள்கையில் ஆதிக்கம் செலுத்துகிறது. பெய்ஜிங்கும் கான்பெர்ராவும் பல பிரச்சினைகளில் மோதலுக்குப் பிறகு உறவுகள் விரைவான சரிவைச் சந்தித்தன. இதன் விளைவாக இராஜதந்திர முட்டுக்கட்டை மற்றும் tit fot tat வர்த்தகப் போரை சேதப்படுத்தியது. கோவிட்-19இன் தோற்றம் பற்றிய விசாரணைக்கு கான்பெர்ராவின் அழைப்பு, HuaweiI தடை செய்வதற்கான முடிவு மற்றும் சீனாவின் அரசியல் தலையீடு குறித்த ஆஸ்திரேலியாவின் குற்றச்சாட்டுகள் ஆகியவை முக்கிய சர்ச்சைகளில் அடங்கும். மேலும், இந்தோ-பசுபிக் அரசியலில் அமெரிக்காவின் முகவராகவும் அவுஸ்ரேலியாவின் வடிவம் சீனாவை கொதிநிலைக்கு தள்ளியது. குவாட் கட்டமைப்பும், அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் பெறுவதற்கான அமெரிக்க-பிரிட்டன் கூட்டுடனான அவுஸ்ரேலியாவின் ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தம் சீனாவுக்கு எதிரான அமெரிக்காவின் நகர்வாகவே சர்வதேச அரசியலில் அவதானிக்கப்பட்டது. இதனை UTS அவுஸ்ரேலியா-சீனா உறவுகள் நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜேம்ஸ் லாரன்சன், “அந்த இரண்டு முயற்சிகளும் அமெரிக்க-சீனா மூலோபாய போட்டியின் லென்ஸ் மூலம் அமைக்கப்பட்டன” என விபரித்துள்ளார்.

இப்பின்னணியில் கடந்த கால அரசாங்கத்தில் கட்டமைக்கப்பட்ட



சீனா-அவுஸ்ரேலியா முரண்பாட்டு சூழலில், அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் பதட்டங்களைத் தணிக்க முடியும் என்ற எச்சரிக்கையான நம்பிக்கை கொண்டு வரப்பட்டுள்ளது. இம்மாற்றம் தொடர்பிலே கட்டியெழுப்பப்படும் நம்பிக்கைக்கான காரணங்களை நுணுக்கமாக அவதானிக்க வேண்டி உள்ளது.

ஒன்று, அல்பனீஸின் முன்னோடியான ஸ்காட் மோரிசனின் கீழ், அவுஸ்ரேலியாவிற்கும் அதன் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியான சீனாவிற்கும் இடையிலான உறவுகள் குறைந்த வீழ்ச்சியை அடைந்தன. பத்து நாட்கள் தேர்தல் பிரச்சாரத்தில், அவுஸ்ரேலியாவின் வடகிழக்கு கடற்கரையிலிருந்து 1,000 மைல் தொலைவில் உள்ள மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த தீவுக்கூட்டத்தில் சீனா ஒரு இராணுவ தளத்தை உருவாக்கலாம் என்ற அச்சத்தை எழுப்பி, சாலமன் தீவுகளுடன் சீனா ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. சீனாவை நோக்கிய மோரிசனின் சொல்லாட்சிகள் பெருகிய முறையில் கடுமையாகியது. மேலும் அவரது பாதுகாப்பு மந்திரி பீட்டர் டட்டன் இந்த ஆண்டு "போருக்குத் தயாராகுங்கள்" என்று அவுஸ்ரேலியர்களிடம் கூறியிருந்தார். ஆனால் அல்பானிஸ் சீனாவை எதிர்க்கும் தொனியை எடுத்துள்ளார். அத்துடன் டோக்கியோவில் ஒரு நாள் நாற்கர பாதுகாப்பு உரையாடல் (குவாட் என அழைக்கப்படுகிறது) உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட அல்பானீஸ், 2021இல் பெய்ஜிங்கின் இழிவான கோரிக்கைகளின் பட்டியலை "முற்றிலும் பொருத்தமற்றது" என்று அழைத்தார். மேலும் உறவு முன்னேற ஆஸ்திரேலிய தயாரிப்புகள் மீதான தடைகள் நீக்கப்பட வேண்டும் என்றார். அல்பானிஸ ின் நகர்வுகளை அவதானித்துள்ள முன்னாள் அவுஸ்ரேலிய பிரதமர் கெவின் ரூட், "சீனாவுடன் இன்னும் நிலையான உறவை ஆஸ்திரேலியா எப்போதும் வரவேற்கும் என்று பிரதமர் அல்பானீஸ் சொல்வது முற்றிலும் சரியானது என்று நான் நினைக்கிறேன். ஆனால் சீனாவால் நிறுவப்பட்ட இந்த முன்நிபந்தனைகள் தொடர்ந்து இருக்கும் நிலையில் இருக்காது." எனத்தெரிவித்துள்ளார். ஆக முன்னைய பிரதமர் ஸ்காட் மோரிசனின் சீனா தொடர்பான இறுக்கமான வெளியுறவுக் கொள்கையிலிருந்தானதொரு தளர்வை புதிய பிரதமர் அல்பனீஸ் வெளிப்படுத்தியுள்ளார்.

இரண்டு, முன்னைய அவுஸ்ரேலிய அரசாங்கத்துடன் சீனாவிற்கு காணப்பட்ட நெருக்கடியான உறவினால் சீன அரசாங்கம் அவுஸ்ரேலிய அமைச்சர்களுடனான உறவை முடக்கி வைத்திருந்தது.



எனினும் அவுஸ்ரேலியாவின் புதிய பிரதம மந்திரி அல்பனீஸ ிற்கு மே-23 அன்று சீனப்பிரதமர் லீ கெகியாங் வாழ்த்துச்செய்தியை அனுப்பியுள்ளார். குறித்த வாழ்த்துச்செய்தியில், “சீனத்தரப்பு, கடந்த காலத்தை மறுபரிசீலனை செய்யவும், எதிர்காலத்தைப் பார்க்கவும், பரஸ்பர மரியாதைக் கொள்கையை நிலைநாட்டவும் அவுஸ்ரேலியத் தரப்புடன் இணைந்து பணியாற்றத் தயாராக உள்ளது” என்று கூறியுள்ளார். மே-24 அன்று, செய்தியாளர்களிடம் பேசிய அல்பானீஸ், “சீனப் பிரதமரின் கடிதத்தை வரவேற்பதாகவும், அவுஸ்ரேலியா அனைத்து நாடுகளுடனும் நல்லுறவை விரும்புவதாக” தெரிவித்திருந்தார்.

மேலும், “உலகம் முழுவதிலுமிருந்து வரும் அனைத்து வாழ்த்துக்களையும் நான் வரவேற்கிறேன். நான் அவுஸ்ரேலியாவுக்குத் திரும்பியதும் சரியான நேரத்தில் பதிலளிப்போம்” என்றும் குறிப்பிட்டிருந்தார். அத்துடன், “மாறுவது அவுஸ்ரேலியா அல்ல, சீனா மாறிவிட்டது.” என அவுஸ்ரேலிய புதிய பிரதமர் வலியுறுத்தி குறிப்பிட்டிருந்தார். கோதிநிலையான சமிக்ஞைகள் இருந்தபோதிலும், சீன ஆய்வாளர்கள் அவுஸ்ரேலியாவின் “சீன எதிர்ப்புப் போர்” என்று பெய்ஜிங் விவரித்த பல ஆண்டுகளுக்குப் பிறகு சாதாரண முன்னேற்றங்களை மட்டுமே எதிர்பார்க்கிறார்கள்.

மூன்று, அவுஸ்ரேலிய புதிய தொழிற் கட்சி அரசாங்கம் சீனாவுடனான வெளியுறவுக்கொள்கையில் எதிர்ப்பை பேணினாலும் முன்னைய வலதுசாரி அரசாங்கத்தின் அணுகுமுறையை தொடராது என்பதுவே சர்வதேச அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது. தேர்தலுக்கு முன்னதாக, முன்னாள் பிரதம மந்திரி ஸ்காட் மோரிசன், தொழிற்கட்சி சீனாவின் மீது மென்மையாக இருப்பதாக குற்றம் சாட்டினார். பேராசிரியர் லாரன்சன், மேம்படுத்தப்பட்ட பாதைக்கான வாய்ப்பு இருப்பதாகக் கூறினார். அதாவது “தொழிற்கட்சியின் பார்வையில், சில நேரங்களில் சர்வதேச விதிகள் மற்றும் விதிமுறைகளை புறக்கணிக்கும் சீனாவின் மிகவும் உறுதியான வெளியுறவுக் கொள்கை நடத்தை பற்றிய கவலைகளை காணப்பட்டாலும், ஆத்திரமூட்டலில் இருந்து ஒரு மாற்றம் இருக்கும் என்ற நம்பிக்கையை” வெளிப்படுத்தியிருந்தார்.

மேலும், “இந்த சவாலை கையாள்வதற்கான தொழிலாளர் அணுகுமுறை மோரிசன் அரசாங்கத்தின் அணுகுமுறைக்கு வேறுபட்டது. குறைவான வெடிகுண்டு பேச்சு, அதிக நடைமுறை நடவடிக்கை மற்றும் இராஜதந்திரம்



போன்ற கடின சக்தி அல்லாத பதில்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது" என்று பேராசிரியர் லாரன்சன் ABC செய்தி சேவைக்கு தெரிவித்தார். UNSW Canberraவின் மூத்த விரிவுரையாளரான பிச்சமன் யோபான்டாங், "குறைவான ஆத்திரமூட்டும், மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட சொல்லாட்சிகளில் மாற்றம் இருக்கும்" என்று ஒப்புக்கொண்டார்.

நான்கு, போட்டியற்ற உறவுகளில் பிராந்தியத்தில் கவனம் செலுத்தும் அரசியல் கொள்கையை புதிய அரசாங்கத்தின் உரைகளில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தொழிலாளர் வெளியுறவுத்துறை அமைச்சராகப் பதவியேற்ற பென்னி வோங், தென்கிழக்கு ஆசியாவுடன் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றுவதற்கான தனது விருப்பங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் பசிபிக் பகுதிக்குச் செல்வதில் நேரத்தை



வீணடிக்கவில்லை என்ற கருத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார். "எங்கள் பசிபிக் குடும்பத்துடன் சில எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள" என பதவியேற்ற உடனேயே அவர் ட்விட்டரில் ஒரு வீடியோ அறிக்கையை வெளியிட்டார். "நாங்கள் ஒரு வலுவான பசிபிக் குடும்பத்தை உருவாக்க உதவ விரும்புகிறோம், அதனால்தான் நாங்கள் இன்னும் அதிகமாக செய்வோம். ஆனால் நாங்கள் அதை சிறப்பாக செய்வோம்" என்று அவர் கூறினார். இக்கருத்தாடல் சீனாவுடன் கட்டமைக்கப்படவுள்ள போட்டியற்ற உறவையே வெளிப்படுத்துகிறது.

பல ஆண்டுகளாக, அமெரிக்காவுடன் உறுதியாக இணைந்திருக்கும் மற்றும் பெய்ஜிங்குடன் போட்டியிடும் வகையில் வடிவமைக்கப்பட்ட பிராந்தியத்தில் உறவுகளை வலுப்படுத்துவதில் ஆஸ்திரேலியா கவனம் செலுத்துகிறது. இந்நிலை தொடர்பாக கருத்துரைத்துள்ள பேராசிரியர் லாரன்சன், "முன்னைய அரசாங்கத்தில், ஆசியா-பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் முதன்மையை நிலைநிறுத்துவதற்கான தனது விருப்பத்தை ஆஸ்திரேலியா மிகத் தெளிவாக வெளிப்படுத்தியது. தொழிலாளர் அரசாங்கத்தின் கீழ் அதுதான் மாறப் போகிறது என்று நான் நினைக்கிறேன். தொழிற்கட்சியும் பிராந்திய பங்காளிகளுடன் தங்கள் சொந்த விதிமுறைகளில் ஈடுபடுவதற்கும் அவர்களின் ஆலோசனைகளைக் கேட்பதற்கும் மிகவும் தயாராக உள்ளது." எனக்குறிப்பிட்டுள்ளார்.



எனவே, அவுஸ்ரேலியாவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் நலனில் சற்று கடினமான பாதைகளை உருவாக்க உள்ளதையே வெளிப்படுத்தி உள்ளது. தொழிற்கட்சி அரசாங்கம் பொதுத்தேர்தலில் குறிப்பிட்டது போன்று புரட்சியான மாற்றமாக அமையாத போதிலும் அணுகுமுறைகளில் அவுஸ்ரேலிய புதிய மாற்றங்களை வெளிப்படுத்த தயாராகுவதே அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இறுக்கமான சீனா உறவிலும் நெருக்கமான அமெரிக்கா உறவிலும் சடுதியான முரணான மாற்றங்கள் உருவாக்க எத்தணிக்காத போதிலும் மாற்றங்களை எதிர்பார்க்கலாம் என்பதுவே தொழிற் கட்சி அரசாங்கத்தின் ஆரம்ப உரையாடல்கள் வெளிப்படுத்துகிறது.

## விலை உயர்ந்த கார்




மெர்சிடிஸ் பென்ஸ் நிறுவனம் உலகின் விலை உயர்ந்த காரை விற்பனை செய்து சாதனை படைத்திருக்கிறது. தனியார் ஏலத்தில் மெர்சிடிஸ் 1955 300 **SLR Uhlenhaut** மாடல் 135 மில்லியன் யூரோக்களுக்கு விற்பனையாகி இருக்கிறது. இந்த கூப் ப்ரோடோடைப் மாடலின் பெயர், இதனை உருவாக்கியவரும், மூத்த பொறியாளருமான **Rudolf Uhlenhaut**-ஐ கௌரவிக்கும் வகையில் சூட்டப்பட்டு இருக்கிறது.

முன்னதாக உலகின் விலை உயர்ந்த கார் என்ற பெருமையை 1962 இல் பெராரி 250 **GTO** மாடல் பெற்று இருந்தது. இந்த கார் 48.4 மில்லியன் டாலர்களுக்கு 2018 இல் விற்பனை செய்யப்பட்டது..

## மிகப்பெரிய தங்க நாணயம்



பிரிட்டன் ராணியாக எலிசபெத் முடிசூடப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு 15 கிலோ எடையும் 8.7 அங்குலமும் கொண்ட மிகப்பெரிய தங்க நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.



# மனப்பசி

தயாளன் சிந்திசை

ஆத்மா வரைந்த கோடுகள்
சிறு பிள்ளை, கிறுக்கல் போல்
அன்பு விளையாட்டு நீளுகிறது.
அடுக்கி சேர்த்த தூரிகையெல்லாம்
உடைபட்டு சிதறுகிறது.

தேடாத தெருவெங்கும்
தினமும் நட்ச்சத்திரம்
ஆய்ந்து
அளக்காமல்
அணைக்காத உளமெங்கும்
கொட்டி தீர்த்திட
அழகு மானோ
அதிசய மயிலோ
அன்பது பாய்ச்சுகையில்
நொடிப்பொழுதில்
பறந்தலைகிறாய்.

ஆம்பலையும்
அழகு நதியையும்
ஆதவ கதிர்களையும்
ஆழத்தில் முத்தையும்
அற்புத வரையையும்
நீ இசைவாயா
உனக்காய் பரிசளிப்பதற்கு!!!

தனிமைத் தீவில்
கொடியது எண்ணம்
நெடியது எண்ணம்
மடியது உன் வண்ணம்
தேடியது உன் வதனம்
கூடியது உன்னால் சோகம்
பாடியது புலம்பல் கீதம்
வாடியது அழகு புருவம்
நாடியது கரத்தின் நிலை
கூட்டிவருவேனா கடந்த காலத்தை
தேற்ற வருவரோ
மனத்தின் கோலத்தை
வண்ணம் இறைத்திட
தரிசணம் தருவாயோ

தேடல் மனமே
தேடும் பூ
பூத்திடுமா

வாடல் மனமே
வாட்டிடும் தென்றல்
வருடிடுமா

மனப்பசியில்
காத்திருக்கிறது.......

34

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

# ஈழச் சூழலியல்

## உழவியல் மற்றும் சூழலுக்கான மண் பொசுபரசின் மாறுநிலை (Critical) அளவு

(தொடர்ச்சி)

அனேகமான அபிவிருத்தியடைந்த நாடுகளில், பெரும்பாலான விவசாயிகள் கட்டணம் செலுத்தி அங்கீகாரம் பெற்ற ஆய்வு கூடங்களில், தங்களது மண்ணின் தாவரப் போசனைப் பதார்த்தங்களை பரசோதித்துக் கொள்கின்றனர். இலங்கையிலும் விவசாயத் திணைக்களம் மண் பரிசோதனை செய்து பயிர்களுக்கேற்ற உரம் சிபாரிசு செய்யும் அத்தகைய சேவையை விவசாயிகளுக்கு வழங்குகின்றது. மண்ணில் கிடைக்கக் கூடிய பொசுபரசின்



அளவு அதிகரிக்கும் போது, மண்ணரிப்பு, மேற்பரப்பு நீரோட்டம், மண்ணுடாக நீர் வடிதல் மூலம் மண்ணிலிருந்து இழக்கப்படும் பொசுபரசு வீதமும் அதிகரிப்பதாக பல ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கின்றனர். உண்மையில் மண்ணில் பொசுபரசை வைத்துக் கொள்ளும் நிலைகள் நிரம்பலடையும் மட்டத்தை விட மேலதிக பொசுபரசு உரம் இடல், மழை மேற்பரப்பு நீரோட்டம் மூலம் பொசுபரசு இழத்தலை பொதுவாக அதிகரிக்கச் செய்கிறது.

1960 தசாப்த நடுப்பகுதி அளவில் பொசுபரசு உரங்களின் காரணமாக நீர்நிலைகளில் பொசுபரசின் செறிவு கூடுவது சர்வதேச நிலையில் பாரிய சூழல் பிரச்சினையாக ஆரம்பமானது. சூழலுக்கான மண்ணின் மாறுநிலை பொசுபரசின் உயர்மட்ட அளவு நிர்ணயம் செய்யப்பட வேண்டிய தேவையை பல நாடுகள் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளன. சில நாடுகள் ஏற்கனவே இவ் உயர்மட்ட அளவை Olsen P50 - 60 ppm ஆக நிர்ணயித்துள்ளன. உழவியல் மண்ணின் உயர் மட்ட பொசுபரசு அளவு என்பது அதனைவிட

கூடுதலாக பசளை இடப்படும் போது மேலதிக இலாபம் எதனையும் தராத நிலையாகும். சூழல் தொடர்பான உயர்மட்ட அளவு என்பது அதனை விட கூடுதலாக இருக்கும் போது அது நீர் நிலைகளின் பொசுபரசு செறிவினைக் கூட்டி நற்போசனை நிலையை தோற்றுவிப்பதாகும். சூழல் தொடர்பான உயர்மட்ட அளவினைத் தீர்மானிக்கும் யோசனை விவேகமுள்ளதும் தேவையானதுமாயினும் மண் வகை, நில அமைப்பு, விவசாயக் கால நிலை மற்றும் சமூக, அரசியல், கலாசார நிலமைகள் வேறுபடுவதால் எல்லா நிலங்களுக்கும் பொதுவான ஒரு அளவு மட்டத்தினைத் தீர்மானிப்பது சாத்தியமற்றதாகும்.

நுவெரெலியாவிலிருந்து பெறப்பட்ட 1600 மண் மாதிரிகளில், 50%க்கும் அதிகமானவை 60 ppm விட அதிக பொசுபரசைக் கொண்டிருந்தன. சில மாதிரிகள் 300 ppm விட அதிகமாகவும், ஒரே ஒரு மாதிரி 400 ppm விட அதிக பொசுபரசைக் கொண்டிருந்தது. இவ்வாறான அதிகரித்தளவான பொசுபரசு ஏனைய நாடுகளில் காணப்படுவது மிகவும் அரிதே. அதிக பொசுபரசைக் கொண்ட மண் நுவரெலிய விவசாயிகளுக்கு



சுற்றாடல் ரீதியாக எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாவிடினும் 100 –200 மைல்களுக்கு அப்பால் வாழும் மக்களின் குடிநீரின் பாதுகாப்புக்கு அது ஒரு பெரும் அச்சுறுத்தலாகலாம். பசளை இடுவதனால் மண்ணில் பொசுபரசு அதிகரிப்பு ஏற்படுவதனை உணர்ந்த சில நாடுகள் இந்த நிலமையை கட்டுப்படுத்த சட்ட விதிகள் மற்றும், வரையறைகளை அறிமுகப் படுத்தியுள்ளன. அமெரிக்காவின் இடகோ (Idaho) மாநிலம் அவைகளது விவசாய நிலங்களில் Oslen P இன் அளவை 40 ppm ஆக மட்டுப் படுத்தியுள்ளது. மண் பரிசோதனை அளவு 40 ppm ஐ விட அதிகரிப்பின் பயிரினால் உறிஞ்சி அகற்றப்படும் உயர் பொசுபரசின் அளவையே விவசாயிகளால் இடுவதற்கு அனுமதிக்கப்படும். இதே மாதிரியான சட்டம் கனடாவின் மனிடோபாவில் 2007(41) இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான சட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தும் நிலை ஏற்பட்டால் தற்போது மரக்கறித் தோட்டங்களில் பொசுபரசு பசளைகள் இடும் வீதம் சட்டவிரோதமானதாகக் கருதப்படலாம். உரத்தை தடை செய்வதல்ல அதற்கு மாற்றீடு, பயிர் உற்பத்தி குறைவடையாமல் மண் பொசுபரசை சூழல் சார்ந்த பாதுகாப்பான அளவு மட்டத்துக்குக் குறைப்பதற்கு போசனை முகாமைத்துவத்துக்கான திட்டம், மண் பரிசோதனை என்பன வெற்றிகரமாக பல அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## நற்போசணைக்குள்ளாகிய நீர் நிலைகளை வகைப்படுத்தல்

இயற்கை நிகழ்வுகளான மண் கனியுப்புக்கள் சிதைவடைதல், மண்சரிவு, நிலநடுக்கம், கடல் கொந்தளிப்பு போன்றவை, மனித நடவடிக்கைகளின் காரணமாக நீர் நிலைகள் வித்தியாசமான அளவில் தாவரப் போசனைகளைக் கொண்டுள்ளன. மண் போசனை அளவைப் பற்றி விளக்கமளிக்கவும், பொருத்தமான முகாமைத்துவ நடைமுறைளை எடுக்கவும் நீர்நிலைகளை வகைப்படுத்துதல் முக்கியமானதாகும்.

தாவர உயிர்த்திணிவு, தெளிவான நீரின் ஆழம், குளோரபில் அளவு, நைதரசன், பொசுபரசின் செறிவு போன்றவற்றை அடிப்படையாக வைத்து குளத்தை அல்லது நீர்த்தேக்கங்களை வகைப்படுத்தும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாராயினும் வகைப்படுத்தல்களுக்கிடையே எல்லைகளை நிர்ணயிப்பதில் பல கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன. நீரில் காணப்படும் பொசுபரசின் அளவை மையப்படுத்தி ஐரோப்பாவின்



இணைந்த ஆராய்ச்சி நிலையம் 2012 இல் முன்வைத்த வகைப்படுத்தலின் படி Oligo-mesotrophy, mesotrophy, Eutrophy, Hypereutrophy என்றவாறாக வகைப்படுத் தப்பட்டுள்ளது. நீரின் பொசுபரசு அளவு 20 - 30 ppm விட அதிகரிக்குமாயின் சில குளங்களில் அல்காக்களின் உயிர்த்திணிவு அதிகரிப்பதாக ஆராய்ச்சித் தகவல்கள் காட்டுகின்றன.

கனடாவின் அனேகமான குளங்கள் குறைவான போசனை நிலையைக் கொண்டிருக்கின்றன. ஏனெனில் குறைவான சனத்தொகையும் அதன் காரணமாக நீர் நிலைக்குச் குறைவான போசணை சென்றடைவதுமாகும். இதற்கு மாறாக சிறிய நீர்நிலைகள் அதிக சனத்தொகை மற்றும் நீரேந்தும் பிரதேசத்தில் இயங்கும் செறிவான விவசாயப் பண்ணைகள் காரணமாக அமெரிக்காவில் அதிக சதவீதத்தில் நற்போசனைக்குள்ளான நீர்நிலைகள் காணப்படுகின்றன. நற்போசனைக்குள்ளான அனேகமான நீர் நிலைகள் சில தசாப்தங்களுக்கு முன் குறைபோசனை கொண்டனவாக இருந்தன. குறைபோசனை நிலையிலிருந்து அதி போசணைக்கு மாறுவதற்கான காரணம் மனித நடவடிக்கைகளேயாகும். குறைபோசணையுடைய குளங்கள் அனேகமாக மிகவும் தெளிவான நீரைக் கொண்டிருக்கும். அதி போசணைக்குள்ளான குளங்கள் கலங்களுடையதாகவும், அதிகளவு அல்காக்களின் மற்றும் தாவரங்களின் வளர்ச்சியையும் கொண்டிருக்கும் நீரில் குறைந்த அல்லது அதிகரித்த


பொசுபரசு ஆனது முறையே, “நல்லதும் விரும்பத்தக்கதும்”, “கூடாததும் விரும்பத்தகாததும்” என கண்டவாறு சுயமாக பொதுமைப்படுத்திக் கூற முடியாது. ஏனெனில் எதிர்பார்த்த நோக்கத்துக்கேற்ப இது பொருந்தக்கூடியதாக அல்லது பொருத்தமற்றதாக அமையலாம். உதாரணமாக மீன்பிடித்துறையானது, மீனுக்கு உணவாகக்கூடிய நீர்த்தாவரங்களின் வளர்ச்சியைத் தூண்டும். மிதமான அளவு தாவரப் போசனைகளை நீர்நிலைகள் கொண்டிருப்பதனை விரும்பலாம்.

அதே வேளை பொதுமக்களுக்கு குடிநீரை வழங்கும் நிறுவனம் அல்காக்களின் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யாத குறைவான போசனை நிலையை நீர்நிலைகள் கொண்டிருப்பதனை விரும்புவார்கள். உண்மையில் உயிரியல் தொகுதியின் சிறந்த வளர்ச்சிக்கு உதவும் பொருத்தமான பொசுபரசின் அளவைத் தீர்மானிக்கலாம். Erie குள முகாமைத்துவத் திட்டம் அல்காக்களின் வளர்சிக்கு உதவும் ஆனால் அல்காக்களின் மலர்ச்சிக்கு இட்டுச் செல்லாத மொத்தமான பொசுபரசின் அளவை 20 - 30 மைக்ரோகிராம்/லீட்டர் என சிபாரிசு செய்கிறது. ஐக்கிய அமெரிக்காவின் சூழல் பாதுகாப்பு நிறுவனம் 1976 இல் நற்போசனையாவதைத் தடுப்பதற்கு பொசுபரசின் உயர் மட்டத்தை 25 மைக்ரோ கிராம்/லீட்டர் எனப் பரிந்துரைத்தது.



இலங்கையில் நெற்செய்கை, சிறுகாலப்பயிர்களுக்கு 50 வருடங்களுக்கு முன்பு இடப்பட்ட பொசுபரசு பசளைகளின் அளவு,தற்போது இடப்படும் அளவுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாக இருந்தது. முந்திய நிலமைகளை விட தற்போது நீர் நிலைகளில் பொசுபரசின் செறிவானது அதிகளவில் காணப்படுகிறதா என்பதே அடிக்கடி கேட்கப்படும் கேள்வியாகும். கலாவெவா, மின்னேரியா குளம், நுவரவெவா, பராக்கிரம சமுத்திரம் ஆகியன வடமத்திய மாகாணத்தில் உள்ள நீர்த்தேக்கங்களாகும். இவற்றில் பொசுபரசின் அளவு 1960 இல் இருந்து பல மடங்காக அதிகரித்துள்ளது. மிதமான போசனை நிலையிலிருந்து அதி போசணை நிலைக்கு மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆராய்வோம்................






### இடமிருந்து வலம்

1- பழந்தமிழரின் எழுத்தாவணங்களின் நூல் வடிவம்
7- இதை மதியால் வெல்லலாம் என்பார்கள்
8- புரதம் நிறைந்த பழந்தமிழரின் உணவுத்தானியம் ஒன்று
10- ஆசிய நாடு (குழம்பி)
14- தலைவன்
15- அவதானம்
16- உடல்
17- மனைவியின் சகோதரியின் கணவன் (குழம்பி)
18- கட்டில் (குழம்பி)
20- மயிலின் அழகு


### மேலிருந்து கீழ்

1- சித்திரம்
2- ஜனகன் மகள் ஜானகியின் தேசம் (குழம்பி)
3- மதில்
4- பெண்ணுக்கு தேடும் மாப்பிள்ளை
5- பற்களால் தாக்கும் முறை (தலைகீழ்)
6- உணவைக்கேட்கும் உடலின் மொழி
9- சிங்கம் (தலைகீழ்)
11- மந்திரம்
12- மீன் பிடிக்க உதவுவது
13- ஒருவர் மீது வைக்கும் பற்று என்றும் சொல்லலாம்
14- உரம்
15- இவர் வீட்டு கட்டுத்தறியும் கவி பாடுமாம்
17- சூழ்ச்சி
19- பெண்களின் ஆபரணம் (தலைகீழ்)

**சரியான விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

### குறுக்கெழுத்துப்போட்டி - 43 விடைகள்



காவ்யமோகன்

# சித்திராங்கதா

46



## பாலகனை கொன்ற பாதகன்

அஸ்வதமங்கலம் வன்னி மாளிகையை வந்தடைந்தது.

“வரவேண்டும் ஆடலரசி சித்திராங்கதா தேவி! வரவேண்டும்.. கலையரசி கால்பதிக்க இந்த வன்னி மண் முக்காலத்தில் வரம் பெற்றிருக்க வேண்டும்” என்று கூறி வன்னியத்தேவன் சித்திராங்கதாவை வரவேற்றான்.

உடன் வந்த வருணகுலத்தான் அமைதியாகவே அருகில் நின்று கொண்டிருந்தான். தன்னைக் காட்டிலும் சித்திராங்கதாவின் வருகையே தனக்கு முக்கியமானது என்பது போல் பாசாங்கு செய்யும் வன்னியத்தேவனின் நாடகத்தை அவன் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

“தஞ்சை தளபதியையும் இந்த வன்னி மாளிகைக்கு வரவேற்பதில் நான் ஆனந்தம் கொள்கிறேன். தம் வரவு நிச்சயமானது என்பதில் எனக்கு எவ்வித ஐயமும் இருக்கவில்லை..” என்றான் வன்னியத்தேவன்.

“வணங்குகிறேன் வன்னியத்தேவரே! நான் வருவேன் என்பதில் தங்களிற்கு ஐயம் எவ்வாறு இருக்கும்! தேவி சித்திராங்கதாவை தனியே தங்களை நம்பி இங்கே அனுப்பி வைப்பதில் தான் எனக்கு ஐயம் இருந்தது. மங்கையரை தூதனுப்பி அழைத்து கவர்ந்து செல்லும் வீரபுருசர்கள் இங்கு நிறைய இருக்கின்றனரே. அதனால்த்தான் தேவியோடு நானும் வரவேண்டியதாயிற்று” என்றான் வருணகுலத்தான்.

“இது என்ன கூற்று தளபதி? மங்கைகளை கவர்ந்து செல்லும் கோழைகள் இங்கிருப்பதாய்



தங்களிற்கு யாரோ தவறாய் கற்பித்திருக்கிறார்கள்".

"கற்றுக் கொண்டதல்ல வன்னியத்தேவரே, கண்டு கொண்டது. ஏன் ? தங்கள் தோழர் மிக்கபிள்ளை ஆராச்சி நிகழ்த்திய அன்றைய வீரச்செயலை தாங்கள் மறந்துவிட்டீர்களா என்ன?"

"ஓகோ! அதனால்த்தான் அங்ஙனம் கூறினீர்களோ?" என்று கூறி கோரமாகச் சிரித்தான் வன்னியத்தேவன்.

"அந்த சம்பவத்திற்கு காரணங்கள் ஏராளம் இருக்கலாம் தளபதி. உண்மை என்னவென்பதை மிக்கபிள்ளை மட்டுமே அறிவான். அந்த இரகசியத்தை தெரிந்து கொள்ள வேண்டுமாயின் அதற்கு முதலில் மிக்கபிள்ளை சிறையிலிருந்து விடுதலை ஆக வேண்டுமே!" என்று சலித்துக் கொண்டான் வன்னியத்தேவன்.

"அது இருக்கட்டும் தளபதியாரே, தங்களை இப்படி மாளிகை வாயிலில் நிறுத்தி உரையாடுவதற்காகவா அழைப்பு விடுத்தேன்.
உள்ளே வாருங்கள் தளபதியாரே! வாருங்கள்..."
என்று கூறி வன்னி மாளிகையின் உள்ளே இருவரையும் அழைத்துச் சென்றான் வன்னியத்தேவன்.

வருணகுலத்தானை விலகாத வண்ணம் சித்திராங்கதா மாளிகை நோக்கி நடந்தாள். ஒரு வேளை தான் தன்னந்தனியாக வந்திருந்தால் இந்த மாளிகைக்குள் நுழைவதற்குள் தன் உள்ளத்து அச்சம் எங்ஙனம் பிரளயமாகி நின்றிருக்கும் என நினைத்துப்பார்த்துக் கொண்டாள். ஆனால் இப்போது வருணகுலத்தான் உடன் இருப்பதால் தன் துணிவையும் தங்கள் இருவரிற்கும் நடைபெறும் ராஜவரவேற்பையும் எண்ணி அவள் உள்ளம் நனைந்து கொண்டிருந்தாள்.

மாளிகையின் விருந்தினர் கூடம் ஒன்றிற்கு வந்தடைந்த சித்திராங்கதாவும் வருணகுலத்தானும் அந்த விருந்தினர் கூடத்தில் ஏற்கனவே சிலர் இவர்கள் வரவிற்காய் காத்திருப்பதை கண்டு கொண்டனர். முன்பின் தெரியாத அந்த மக்கள் கூட்டத்திடையே தனக்கு நன்கு பரீட்சயமான ஒரு முகம் இருப்பதை வருணகுலத்தான் இலகுவாக இனங்கண்டு கொண்டான். வணங்கியபடி நின்ற உக்கிரசேனனை பார்த்து ஓர் கேலிச்சிரிப்பொடு பதில் வணக்கம் கூறினான் வருணகுலத்தான்.

"எப்படி இருக்கின்றாய் என் இனிய வழிகாட்டியே" என்று உக்கிரசேனன் தோள்களில் தட்டியபடியே கேட்டான்.

"தங்கள் தயை கூர்ந்து விட்டுவைத்ததால் தைரியமாக திரிகிறேன் தளபதி" என்றான் உக்கிரசேனன். அந்த பதில் கேட்ட வருணகுலத்தான் ஆரோகித்து சிரிக்க ஆரம்பித்தான்.

மேலும் அந்தக் கூட்டத்தில் சிலர் வெள்ளையர்களாக காணப்பட்டதையும் ஒரு கண் போக்கில் அவதானித்தபடியே வருணகுலத்தான்

தனக்கென வைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். சித்திராங்கதாவும் அருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

நேரே சென்று அந்த கூடத்தின் உயர்ந்த மேடையில் அமைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் வன்னியத்தேவன் அமர்ந்து கொண்டான். பார்வைக்கு அந்தக்காட்சி அத்தனை கம்பீரமாய் இருந்தது. ஒரு மகாராஜாவிற்கான பிரகாசம் வன்னியத்தேவன் முகத்தில் தெரிந்தது.

அடங்காப்பற்றின் பெரும்பாலான பகுதியை ஆள்கின்ற வன்னிமன்னனின் இந்த பிரகாசத்தையே பறங்கியர்கள் தம் சூழ்ச்சிகளால் தூண்டிவிடுகிறார்கள் என்பதை வருணகுலத்தான் புரிந்து கொண்டான். புகழ் வார்த்தைகளால் வன்னியத்தேவனின் நம்பிக்கையை பெருக்கி தமக்காக எதையும் செய்யத் துணியும் வீரனாய்



பறங்கியர்கள் வன்னியத்தேவனை உருமாற்றியிருக்கிறார்கள் என்பது வன்னியத்தேவன் கம்பீரமாய் அந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கும் விதமே வருணகுலத்தானிற்கு உணர்த்தியது.

“யாரங்கே?.. ஆடலரசிக்கு சமர்ப்பணமாய் நாம் வழங்க இருக்கும் பரிசுகள் எங்கே? இப்போதே அவையில் நிகழ்வுகள் ஆரம்பிக்கட்டும்”

என்று வன்னியத்தேவன் இட்ட ஆணையைத் தொடர்ந்து சில சிறுமிகள், மங்கைகள் கூடத்தின் மத்தியில் வந்து நின்றனர். சித்திராங்கதாவையும் வருணகுலத்தானையும் வணங்கியபடி அவர்கள் நாட்டியம் ஆரம்பமானது.

தனக்கு கிடைக்கின்ற மரியாதைகளை எண்ணுகையில் சித்திராங்கதாவின் உள்ளம் பேரானந்தத்தில் மிதந்தது என்றே சொல்ல வேண்டும். நல்லூர்க் கோட்டையில் தன் அரங்கேற்றம் நிகழ்வதாய் அவள் உள்ளத்தில் தீட்டி வைத்திருந்த அந்த கற்பனை ஓவியங்கள் அவள் உள்ளத்தில் வந்து மறைந்தன. அதை எண்ணுகையில் கூடவே ராஜகுலத்தவர்கள் மீதான அவள் கோபமும் மேலெழுந்து மூண்டு கொண்டிருந்தது.

அந்த மங்கையரின் நாட்டியத்தை தொடர்ந்து சிவப்பு நிற மெல்லிய ஆடை அணிந்த சில போர்த்துக்கேய பெண்கள் கூடத்தில் வந்து ஆட ஆரம்பித்தனர். வேறுபட்ட நளினங்களும், வேறுபட்ட முகபாவங்களும் கொண்டு அவர்கள்

ஆடிய ஆட்டத்தை சித்திராங்கதா வித்தியாசமாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நிலையான இடம் என்றில்லாமல் அந்த கூடத்தின் எல்லா திசைகளிற்கும் நடனமாடிய படியே நகர்ந்து சென்றனர் அந்த வெள்ளை அழகிகள். கூடத்தில் இருந்த பறங்கியர்கள் சிலரின் அருகில் அவர்கள் வந்து தொடுவதும் உடன் ஆட அழைப்பதுமான அந்தக் காட்சிகள் அங்கிருந்த அனைவருக்குமே சிரிப்பை உண்டாக்கியது.

அந்த நாட்டிய நிகழ்வுகளை சித்திராங்கதா இரசித்துக் கொண்டிருப்பதை உணர்ந்த வருணகுலத்தான் அந்நிகழ்வுகள் நிறைவடையும் வரை பொறுமை காத்தான். யாவும் நிறைவுற்ற பின் தன் மௌனம் கலைத்தான்.

“வன்னியத்தேவரின் வரவேற்பு அற்புதமாகத்தான் இருக்கிறது. ஆனால் வரவழைத்த காரணத்தை தான் இன்னும் வன்னி வேந்தர் கூறவில்லை” என்றான்.

“கூறுகிறேன் தஞ்சை தளபதியாரே, அதற்குள் என்ன அவசரம்? முதலில் விருந்துண்ணுங்கள். தங்களிற்காக சுவையான விருந்துகள் காத்திருக்கின்றன.”

தன் ஆசனத்தில் இருந்து திடுமென எழுந்த வருணகுலத்தான்

“மன்னிக்க வேண்டும் வன்னியத்தேவரே, விருந்துண்டு மகிழ என்னிடம் அவகாசம் இல்லை. தாம் அழைத்த காரணத்தை தெரிவித்தால் நாம் விரைந்து புறப்பட ஏதுவாக இருக்கும். அப்படி தாங்கள் கூற தயங்கினால் நான் கூறுகிறேன். தஞ்சையிலிருந்து வந்த நான் எக்காரணம் கொண்டும் எந்நேரத்திலும் தங்களுடன் கூட்டுச்சேர உடன்பட மாட்டேன். வெள்ளையர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற ஆணை தாங்கி படை கொண்டு ஈழம் வந்தவன் நான். அக்காரியம் ஆற்றாமல் நான் மீண்டும் என் தாய்தேசம் திரும்ப மாட்டேன். என் மனதை மாற்ற முயற்சிப்பது தமக்கு வீணான நேரவிரயம் என்பதை இப்போதே கூறுகிறேன். இதற்கு மேலும் தாங்கள் என்னிடம் கூறுவதற்கு ஏதாவது இருக்கின்றதா வன்னியத்தேவரே..?”

என்று கம்பீரமான குரலில் அவையோர் அனைவர்க்கும் கேட்கும்படி சொன்னான்.

“இத்தனை ஆணவமாக பேசுகிறானே இவன்” என்று உள்ளத்தில் நினைத்துக் கொண்ட வன்னியத்தேவன் அங்கிருந்த வெள்ளையர்கள் “இனி என்ன செய்யப் போகிறாய்?” என்பது போல் தன்னையே உற்று நோக்கிக் கொண்டிருப்பதையும் அவதானித்தான்.

“யாரங்கே! அரசவையில் யாவருக்குமான விருந்து ஆரம்பிக்கட்டும்.” என்று கட்டளையிட்டான். பின்

வருணகுலத்தானை நோக்கி

“தளபதியாரே, .. நான் தங்களிடம் தனியாக சில விடயங்கள் பேச விரும்புகிறேன்...” என்று கூறி அருகிலிருந்த இன்னொரு மண்டபத்தை நோக்கிச் சென்றான். வருணகுலத்தானும் பொறுமை காத்து அந்த மண்டபத்தை நோக்கிச் சென்றான். சித்திராங்கதாவும் உடன் சென்றாள்.

அந்த மண்டபத்தில் காவலர்கள் யாவரும் விலகிச் சென்ற பின் மெதுவான குரலில் வன்னியத்தேவன் பேசத்தொடங்கினான்.

“வருணகுலத்தாரே.. தயை கூர்ந்து தாங்கள் பொறுமை காத்தால் என் தரப்பு நியாயத்தை நான் எடுத்துரைக்கிறேன்.”

“மிகுந்த பொறுமையுடன் தான் நான் இங்ஙனம் நிற்கின்றேன் வன்னியத்தேவரே, தங்களிடம் நியாயம் என்று என்ன இருக்கிறது? தமிழாண்ட இந்த வீர நிலத்தில் பிறந்து வெள்ளையனிற்கு துணைபோய் இறுதியில் எதை அடையப்போகிறீர்கள் தாங்கள்?”

“வெள்ளையனிற்கு நான் துணை போகவில்லை தளபதியாரே, எனக்கு துணையாகத்தான் நான் வெள்ளையனை நாடுகிறேன். என்னைப் பொறுத்தவரை இச்சமயம் வெள்ளையனை எதிர்ப்பது என்பது தெற்கு தேசங்கள் போல் எம் முடியினது முழு வீழ்ச்சிக்கு சமமாகும். வெள்ளையனை எதிர்க்க போதுமான பலம் நாம் அடையும் வரை அவர்களுடன் நட்பு பாராட்டி நகர்வதே ராஜதந்திரமாகும். வீராதி வீரனாகிய தங்கள் வீரபராக்கிரமமும் வீணாகி விடக்கூடாது என்பதற்காகவே தங்கள் நட்பையும் வேண்டி நிற்கிறேன்.”

“என் வீரம் வீணாவதில் தங்களிற்கு என்ன கவலை வன்னியத்தேவரே? தங்கள் இந்த இராஜதுரோக போக்கிற்கு என் நட்பை ஏன் எதிர்பார்க்கிறீர்கள்? என் நட்பைக் கொண்டு அப்படியென்ன தேவையை தாங்கள் அடையப்போகிறீர்கள்?”

என்று வெளிப்படையாகக் கேட்டான் வருணகுலத்தான். இந்த கேள்விற்கான பதில் மூலம் வன்னியத்தேவனின் வக்கிரபுத்தியை சித்திராங்கதா உணர்ந்து கொள்ள வேண்டும் என்று வருணகுலத்தான் எதிர்பார்த்தான்.

சித்திராங்கதாவும் இந்த உரையாடலில் எதுவும் குறுக்கிடாமல் மௌனமாக கவனித்துக் கொண்டிருந்தாள்.

“என் தேவை என்பது சங்கிலியனை சரிக்க வேண்டும் என்பதுதான்” என்று விரிந்த புருவத்தோடு கூறினான் வன்னியத்தேவன்.

“இப்படி எண்ணுவது தங்களிற்கு தவறென்று தோன்றவில்லையா வன்னியத்தேவரே? ஈழ சாம்ராச்சியத்தின் ஈடு இணையற்ற வீரமகாராஜா என்று அகிலம் புகழ ஆள்பவரை சரித்துவிடத்

துடிக்கும் தங்கள் எண்ணம் கொடூரமாக தெரியவில்லையா? என் கருத்துப்படி இந்த நாட்டினை ஆள சங்கிலியமகாராஜாவை விட தகுதியானவர் வேறு யாரேனும் இருக்க சாத்தியமேயில்லை."

"தாம் படைதாங்கி வந்த தளபதி. நல்லையின் இராஜ விருந்தாளி. தாம் அப்படியே அறிந்திருப்பீர்கள். அப்படியே நம்புவீர்கள். ஆனால் உண்மை என்பது அதுவல்ல தளபதி. இராச்சியம் ஆள எவ்வகையிலும் தகுதியில்லாத ஒருவன் சங்கிலியன். பிறப்பின் அடிப்படையில் கூட அவன் தகுதியில்லாதவன். முன்னை ஆண்ட வேந்தர் எதிர்மன்ன சிங்க மகாராஜாவிற்குப் பின் ஆட்சியுரிமை கொண்டிருந்த மன்னரது மூன்றேவயதான பாலகனை அநியாயமான முறையில் கொன்று அதை எதிர்த்து நீதி கேட்டு வந்த மன்னரின் இளைய சகோதரர் அரசகேசரியையும் நேருக்கு நேராய் தன் வாளிற்கு இரையாக்கி ஆட்சிபீடத்தை பறித்தெடுத்துக் கொண்டவன் இச்சங்கிலியன். இவனா தலைசிறந்த வேந்தன ? இவனிற்கா தாங்கள் ஆதரவு வழங்கவேண்டும் என்கிறீர்கள்?."

அதுவரை அமைதியாய் இருந்த சித்திராங்கதா
"என்ன கூறுகிறீர்கள் வன்னியத்தேவரே? தாங்கள் கூறுவது மெய்யா? முன்னை வேந்தர் எதிர்மன்ன சிங்கர் மரணிக்க முன்னமே தனக்குப் பின் சங்கிலியனே அரசாள்வான் என்று கூறி உயிர் துறந்தார் என்றும் அதனால் தான் சங்கிலியர் மகாராஜா ஆனார் என்றுமல்லவா நல்லை மாந்தர் அன்று கூறினர்?" என்று கேட்டாள்.

"ஆம் தேவி! அப்படியே உலகத்தோர் நம்பும்படி அறிவித்தனர் அன்று. ஆனால் உண்மை அதுவல்ல. தனக்குப் பின் தன் புத்திரனே முடிக்குரிய வேந்தன் என்றும் ஆனால் அவன் மூன்று வயது பலாகனாக இருந்தமையால் அதுவரை ஆட்சியலுவல்களை கவனிக்க தன் சகோதரன் அரசகேசரியையும் நியமித்தார் வேந்தர். பாவம் அச்சிறு பாலகனை கூட ஈவு இரக்கமில்லாமல் தன் பதவி ஆசைக்காக கொன்றான் சங்கிலியன். இப்போது நல்லவன் போல் வேடம் இட்டு வீரவேந்தன் தான் என்று பறைசாற்றி திரிகிறான்."

சித்திராங்கதாவின் முகம் ஆச்சரியத்தில் பேச்சின்றி கிடந்தது.

"போதும் நிறுத்துங்கள் வன்னியத்தேவரே, ஒரு நாட்டின் வேந்தர் புகழொடு மிளிர்ந்தால் அதனை சாய்க்க ஆயிரம் கட்டுக்கதைகள் நாட்டில் உலாவருவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? இதற்கு மேல் இந்தப் பொய்க்கதைகளை நான் சகித்துக் கொள்ள மாட்டேன்." என்றான் வருணகுலத்தான்.

"என் கூற்றை தாங்கள் நம்ப வேண்டாம் தளபதி. நம்புவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவுமில்லை. தஞ்சை தளபதியாரே, தாங்கள் நம்பும்படியான தகுந்த சாட்சி என்னிடம் இருக்கிறது. வாருங்கள் உங்களை அழைத்துச் செல்கிறேன்."

என்று முன்னோக்கி நடந்தான் வன்னியத்தேவன்.

சிந்தனையில் நகர மறுத்து நின்ற வருணகுலத்தானை தன் கரங்களினால் பற்றிக்கொண்டு வன்னியத்தேவன் சென்ற திசையில் அழைத்துச் சென்றாள் சித்திராங்கதா.

அந்த வன்னி மாளிகையின் அழகின் உச்சம் என்று நினைக்கக்கூடிய அந்த மண்டபத்திற்கு வன்னியத்தேவன் அவர்களை அழைத்து வந்தான்.

*சாட்சிகள் விரியும்....*

## தூங்கும் நேரம் குறையப்போகிறது

காலநிலை மாற்ற பாதிப்பு இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய சிக்கலாக மாறியுள்ளது. இதன் விளைவாக இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் மனிதர்கள் தூங்கும் நேரம் குறைவடையும் என டென்மார்க் நாட்டின் கோபன்ஹேகன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.



ஒன் ஏர்த் இதழில் வெளியாகிய இவ் ஆய்வு முடிவுகள் மொத்தம் 68 நாடுகளில் 47 ஆயிரத்திற்கு அதிகமான வயது வந்தவர்களிடமிருந்து பெறப்பட் 70 லட்சம் தரவுகளை அடிப்படையாக கொண்டவையாகும். அதிகரிக்கும் வெப்பநிலை காரணமாக இந்த நூற்றாண்டின் இறுதியில் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 50 முதல் 58 மணி நேர தூக்கத்தை இழக்க நேரிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குள்ள மனிதர்

நேபாளத்தைச் சேர்ந்த டோர் பகதூர் கபாங்கி என்ற 73 செ.மீ (2.5 அடி) உயரம் கொண்ட 18 வயதான இளைஞர் உலகின் மிக குள்ளமான மனிதர் என்ற கின்னஸ் சாதனையை படைத்துள்ளார்.



# பூப்பந்தாட்ட போட்டித் தொடர்




எஸ்.எஸ்.நுஜன்

பூப்பந்தாட்ட உலக கூட்டமைப்பினால் (BWF - Badminton World Federation) நடாத்தப்படுகிற உலக ஆடவர் அணி சாம்பியன்ஷிப்ஸ், சர்வதேச பூப்பந்தாட்ட கூட்டமைப்பின் (இப்போது பூப்பந்தாட்ட உலக கூட்டமைப்பு) நிறுவுனர் மற்றும் தலைவர் சேர் ஜார்ஜ் தோமஸ் இனை கௌரவிக்கும் வகையில் தோமஸ் கப் என அழைக்கப்படுகிறது. 1939 இல் இதற்கான முன்னெடுப்புக்கள் தோமஸினால் மேற்கொள்ளப் பட்டாலும், 1949 இல் தான் முதலாவது தொடர் ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவது சாம்பியன்ஷிப்ஸ் தொடரில், அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் பசிபிக் பிராந்தியங்களில்





இருந்து ஒரு அணி வீதம் மூன்று அணிகள் பங்கெடுத்தன. மலேசிய அணி முதலாவது மகுடம் சூடிக்கொண்டது. 1952 இல் நான்கு அணிகள் பங்கெடுத்த தொடரில் மீண்டும் மலேசிய அணி மகுடம் வென்றது.

ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒரு முறை நடாத்தப்பட்டு வந்த இத்தொடர், 1984 முதல் இருவருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. அத்துடன் எட்டு அணிகளும் பங்குபற்றின. 2004 ம் ஆண்டில் 12 அணிகளாக உயர்த்தப்பட்ட அணிகளின் எண்ணிக்கை, 2014 ம் ஆண்டு முதல் 16 அணிகள் ஆனது. முதல் மூன்று சாம்பியன்ஷிப்ஸ்களை மலேசிய

அணி வென்று இருந்தாலும் அதன் பின் வெறுமனே இரு தடவைகளே வென்றிருந்தது. இதுவரை நடைபெற்ற 32 தொடர்களில் இந்தோனேசிய அணி 14 தடவைகளும் சீன அணி 10 தடவைகளும் வென்று முன்னிலை வகிக்கின்றனர். முறையே 2014, 2016, மற்றும் 2022 இல் வென்ற ஜப்பான், டென்மார்க் மற்றும் இந்திய அணிகள், சாம்பியன்ஷிப்ஸ் வென்ற மற்றைய அணிகளாக உள்ளன.

நோக் அவுட் (Knock Out) முறையில் நடைபெறும் இந்த தொடரில் ஆரம்பம் முதல், அணிகளுக்கு இடையேயான வெற்றி என்பது ஐந்து ஒற்றையர் மற்றும் நான்கு இரட்டையர் என ஒன்பது ஆட்டங்களில் அதிகம் வெற்றி பெறும் அணி வெற்றியாளராக கணிக்கப்பட்ட நிலையில் பங்குபெறும் அணிகள் அதிகரித்தால் 1984 ம் ஆண்டு முதல் மூன்று ஒற்றையர் மற்றும் இரு இரட்டையர் கொண்ட ஐந்து




ஆட்டங்களில் அதிகம் வெல்லும் அணி வெற்றியாளரானது.

1950 இல் பேட்டி உபெர் (Betty Uber) இனால் முன்மொழியப்பட்ட உலக மகளிர் அணி சாம்பியன்ஷிப்ஸ், 1956/57 முதல் நடைபெற்று வருகிறது. இதுவரை நடந்த 29 தொடர்களில் 15 தடவை சாம்பியன்ஸ் ஆன சீன அணி முன்னிலை வகிக்கிறது.
இதனை முன்மொழிந்த உபேர் பெயரில் உபேர் கப் (Uber Cup) என அழைக்கப்படுகிறது.



| Year[15] | Host | Champions | Score | Runners-up |
|---|---|---|---|---|
| | | Final | | |
| 1949 Details | Preston, England | Malaya | 8–1 | Denmark |
| 1952 Details | Singapore | Malaya | 7–2 | United States |
| 1955 Details | Singapore | Malaya | 8–1 | Denmark |
| 1958 Details | Singapore | Indonesia | 6–3 | Malaya |
| 1961 Details | Jakarta, Indonesia | Indonesia | 6–3 | Thailand |
| 1964 Details | Tokyo, Japan | Indonesia | 5–4 | Denmark |
| 1967 Details | Jakarta, Indonesia | Malaysia | 6–3 | Indonesia |
| 1970 Details | Kuala Lumpur, Malaysia | Indonesia | 7–2 | Malaysia |
| 1973 Details | Jakarta, Indonesia | Indonesia | 8–1 | Denmark |
| 1976 Details | Bangkok, Thailand | Indonesia | 9–0 | Malaysia |
| 1979 Details | Jakarta, Indonesia | Indonesia | 9–0 | Denmark |
| 1982 Details | London, England | China | 5–4 | Indonesia |
| 1984 Details | Kuala Lumpur, Malaysia | Indonesia | 3–2 | China |
| 1986 Details | Jakarta, Indonesia | China | 3–2 | Indonesia |
| 1988 Details | Kuala Lumpur, Malaysia | China | 4–1 | Malaysia |
| 1990 Details | Tokyo, Japan | China | 4–1 | Malaysia |
| 1992 Details | Kuala Lumpur, Malaysia | Malaysia | 3–2 | Indonesia |
| 1994 Details | Jakarta, Indonesia | Indonesia | 3–0 | Malaysia |
| 1996 Details | Hong Kong | Indonesia | 5–0 | Denmark |
| 1998 Details | Hong Kong SAR, China | Indonesia | 3–2 | Malaysia |
| 2000 Details | Kuala Lumpur, Malaysia | Indonesia | 3–0 | China |
| 2002 Details | Guangzhou, China | Indonesia | 3–2 | Malaysia |
| 2004 Details | Jakarta, Indonesia | China | 3–1 | Denmark |
| 2006 Details | Sendai and Tokyo, Japan | China | 3–0 | Denmark |
| 2008 Details | Jakarta, Indonesia | China | 3–1 | South Korea |
| 2010 Details | Kuala Lumpur, Malaysia | China | 3–0 | Indonesia |
| 2012 Details | Wuhan, China | China | 3–0 | South Korea |
| 2014 Details | New Delhi, India | Japan | 3–2 | Malaysia |

| Year | Host | Champions | Score | Runners-up |
|---|---|---|---|---|
| | | Final | | |
| 2016 Details | Kunshan, China | Denmark | 3–2 | Indonesia |
| 2018 Details | Bangkok, Thailand | China | 3–1 | Japan |
| 2020 Details | Aarhus, Denmark | Indonesia | 3–0 | China |
| 2022 Details | Bangkok, Thailand | India | 3–0 | Indonesia |

2022 ம் ஆண்டுக்கான தோமஸ் கப், கடந்த மாதம் எட்டாம் திகதி முதல் பதினைந்தாம் திகதி வரை இடம்பெற்றது. பதினைந்தாம் திகதி நடந்த இதன் இறுதி ஆட்டத்தில் இந்திய மற்றும் இந்தோனேசிய அணிகள் பலப்பரீட்சை நடத்தினர். இதில் இரு ஒற்றையர் மற்றும் ஒரு இரட்டையர் ஆட்டங்களை வென்று 3-0 என முன்னிலை வகித்த இந்திய அணி முதல் முறையாக தோமஸ் கப் வென்றது. 73 வருடங்களில் 13 முறை தகுதி பெற்ற இந்தியா ஒருமுறை கூட இறுதிக்கு முன்னேறியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2022 ம் ஆண்டுக்கான உபேர் கப் இனை, இறுதி ஆட்டத்தில் சீன அணியை வெற்றி பெற்ற ஜப்பான் அணி ஐந்தாவது தடவையாக வென்றுள்ளது.

